கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசம்பர் 2019)

# HCS 2232 Upanishada and Bhagavadgita

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. "இந்து தத்துவங்களின் ஊற்று உபநிடதங்கள்" இதனை அடிப் படையாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
   (i) கடவுள் (06 புள்ளிகள்)
   (ii) ஆன்மா (07 புள்ளிகள்)
   (iii) பிரபஞ்சம் (07 புள்ளிகள்)

02. இந்துக்களின் புனிதநூல் என்ற வகையில் பகவத்கீதை பெறுகின்ற சிறப்பினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.
   (i) பகவத்கீதை உபதேசிக்கப்பட்ட சந்தர்ப்பம் (10 புள்ளிகள்)
   (ii) தத்துவ சிந்தனைகள் (10 புள்ளிகள்)

03. தத்துவங்களைக் கடந்து, வாழ்வியலைப் போதிக்கும் உபதேசப் பெட்டகங்களாக உபநிடதங்கள் விளங்குகின்றன எனும் கூற்றினை தைத்திரிய உபநிடத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.
   (i) தைத்திரிய உபநிடத நூலும் அதன் அமைப்பும் (10 புள்ளிகள்)
   (ii) தைத்திரிய உபநிடதம் கூறும் வாழ்வியற் போதனைகளும் உம்மை வழிப்படுத்திய சந்தர்ப்பங்களும் (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. "மன உறுதி மற்றும் மன அமைதி போன்ற சித்தாந்தங்களின் சுருக்கத்தை பகவத்கீதையிலுள்ள சாங்கிய யோகம் தருகின்றது" என்பதை ஏற்றுக்கொள்வீரா? ஆராய்க. (30 புள்ளிகள்)

05. வளிமண்டலம் மாசு அடைந்துகொண்டு வருவதன் ஆபத்துக்கள் பற்றி இன்றைய அறிவியல் சிந்தனையாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துக் கொண்டுவரும் நிலையில் பகவத்கீதை கூறும் "சூழல் பாதுகாப்பு" பற்றிய சிந்தனைகளை பரவலாக்குவதனூடாக எவ்வகையில் சவால்களை தடுக்கலாம் என்பதை மதிப்பிடுக. (30 புள்ளிகள்)

06. இன்றைய மருத்துவ உலகிற்கு "உபநிடதங்கள் கூறும் மகப்பேற்று வைத்தியம்" எத்தகைய கருத்துக்களைத் தந்துள்ளது என்பதை ஆராய்க. (30 புள்ளிகள்)

*****